# Family in Varadarasan's Kallo? Kaviyamo? novel

Dr. B. Periyaswamy,
*Assistant Professor, Department of Tamil,*
*Dr. MGR Chockalingam Arts College, Arni,*
*Thiruvannmalai – 632317, Tamil Nadu, India,*
https://orcid.org/0000-0002-7395-9699,

**Abstract**

*The family is the basic couture of man. The family organization is made of its members' sentiment, exchange, and tolerance. This includes sections of the collective family. Mother - Father, Grandmother - Grandfather, Siddhappa - Siddhi, Siddhi, Thambi, Sister, Husband, Wife and Children are all called a joint family, and the family of only husband, wife and children is known as the family. Today's time is often found in solitary families. In this family, how the rights and duties of both male and female are? Is his counterfeit that was in the Kallo? Kaviyamo? The way of the novel has been explored.*

**Keywords**

Mu.Va, Kalo? Kaviyamo?, novel, Pudhinam, Kudumbam, Vazvizhal

**References**

1. Gunasekaran, A. *Tamil Navalgalil Kudumba Cithaivugal*. Newcentury Book House, Chennai, 2006.
2. Shyamala, J. *Thilagavathi Novelgalil Kudumba Cikkalgalum Cithaivugalum*. Kavya, Chennai, 2003.
3. Baskal kispert, (translator J. Narayanan). *Samugavizhal adipadai Kotpadugal.* Tamil Veliyettu Kazhagam, Chennai, 1991.
4. Prama, R. *PenViduthalaiyum Penurimaiyum*. Arivu Pathipagam, Chennai, 2008.
5. Maithili Sivaraman. *Penurimai Sila Parvaigal.* Tamil Puthagalaiyam, Chennai, 1995.
6. Varadharasan. Mu., *Kallo? Kaviyamo?*. Pari Nilayam, Chennai, 1995.

# மு. வரதராசனின் கள்ளோ? காவியமோ? நாவலில் குடும்பம்

**முனைவர் பீ. பெரியசாமி,**
*உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,*
*டாக்டர் எம்.ஜி.ஆர். சொக்கலிங்கம் கலைக் கல்லூரி,ஆரணி,*
*திருவண்ணாமலை- 632317, தமிழ்நாடு, இந்தியா,*
**https://orcid.org/0000-0002-7395-9699**,

**ஆய்வுச்சுருக்கம்**

*மனிதனின் அடிப்படை கூட்மைப்பாக குடும்பம் விளங்குகின்றது. இக்குடும்ப அமைப்பானது அதன் உறுப்பினர்களின் உணர்வாலும், கருத்து பரிமாற்றத்தாலும், சகிப்புத்தன்மையாலும் ஆனது. இது கூட்டுக்குடும்பம் தனிக்குடும்பம் எனும் பிரிவுகளை உள்ளடக்கியது. தாய் – தந்தை, பாட்டி – தாத்தா, சித்தப்பா – சித்தி, தம்பி, தங்கை, கணவன் – மனைவி, குழந்தைகள் என அனைவரும் இணைந்து வாழும் குடும்பம் கூட்டுக் குடும்பம் என்றும், கணவன் – மனைவி, குழந்தைகள் மட்டும் வாழும் குடும்பம் தனிக்குடும்பம் என்றும் அழைக்கப்படுகிறது. இன்றைய காலக்கட்டத்தில் பெரும்பாலும் தனிக்குடும்பங்களே காணப்படுகின்றன. இக்குடும்பச் சூழலில் ஆண் – பெண் இருவருக்குமான உரிமைகள், கடமைகள் எவ்வாறு மு.வ. வின் காலத்தில் இருந்தது என்பதை அவரின் கள்ளோ? காவியமோ? எனும் நாவலின் வழி ஆராயப்பட்டுள்ளது.*

*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிர்காலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்*

© 2025, IRJTSR

**முக்கியச்சொற்கள்**

மு.வ., கள்ளோ? காவியமோ?, நாவல், புதினம், குடும்பம், வாழ்வியல்

**குடும்பம்**

குடும்பம் என்பது தனிமனிதனை ஒன்றிணைக்கும் ஒரு நிறுவனமாகும். சமுதாயத்தின் அடிப்படையாக விளங்குவதாகும். இரத்த உறவுடைய அப்பா, அம்மா, அண்ணன், அண்ணி, சித்தப்பா, பெரியப்பா, தம்பி, தங்கை என அனைவரும் கூடிவாழும் ஓர் சமூக அமைப்பே குடும்பமாகும். இதனை,

> **இரத்த உறவால் பிணைக்கப்பட்டிருப்பவர்களும் அவர்களைச் சார்ந்து இருப்பவர்களும் நண்பர்களும் ஒரே கூரையின் கீழ் குழுவாக இணைந்து வாழ்வது குடும்பம் எனப்படும். (திலகவதி நாவல்கள் குடும்பச் சிக்கல்களும் சிதைவுகளும்,ப. 1)**

இதில், நண்பர்கள் கூடி வாழ்வது சமூகம் என்றுதானே கூறப்படுகிறது. ஆனால், அவர்களும் சேர்ந்து இருப்பதே குடும்பம் என்கிறார் சியாமளா. இது ஒரு புதுவிதமானப் பார்வையாகத்தான் உள்ளது. அவர் எதனடிப்படையில் அவ்வாறு கூறினார் என்பதை நாம் சிந்திக்க வேண்டியுள்ளது. ஆனால் பொதுவாக அவ்வாறு எங்கும் கூறப்பட்டிருப்பதாகத் தெரியவில்லை. இதற்கு வலுசேர்க்கும் விதமாக,

> **”குடும்பம் தலைமுறை தலைமுறையாகப் பண்பாட்டு மரபுரிமையைக் கொண்டு செல்லும் ஒரு செயலி” (சமுகவியல் அடிப்படை கோட்பாடுகள், ப.97)**

என்கிறார் பாஸ்கல் கிஸ்பர்ட். மரபுரிமை என்பது ஒருவரின் மரபின் வழி வந்தோருக்கான உரிமை என்பதாகும். அதனால் குடும்பம் என்பது மரபு வழிபட்டது. அது இரத்த பந்தங்களுக்கானது என்பது தெளிவு. மேலும்,

> **“குடும்பம் ஒரு நிலையம் அல்லது இயைபுக்குழு மட்டுமல்ல, அது ஒரு நிறுவனமும் கூட. அதை நிறுவனங்களின் தொகுதி என்று சொல்வது கூடத் தவறாகாது” (சமுகவியல் அடிப்படை கோட்பாடுகள், ப.96)**

என்கிறார் பாஸ்கல் கிஸ்பர்ட். மேலும்,

> **“ஒரு கூரையால் பாதுக்காக்கப்பட்ட இதயங்களின் இணைப்பு ஒரு குடும்பமாகும். அன்பு, பரிவு, பாதுகாப்புணர்வு, ஒன்றுபட்டு வாழ்வது, சகிப்புத் தன்மை ஆகியவற்றின் உறைவிடம் குடும்பம்“. (பெண்ணுரிமை சில பார்வைகள், ப. 79)**

என்கிறார் மைதிலி சிவராமன். அதாவது குடும்பம் என்பது வெறும் மனிதர்களின் கூட்டமல்ல. அது அந்த மனிதனுக்கான அன்பையும், அவன்மீதான பரிவையும் வெளிக் காட்டுவதாகவும், அவனுக்கு ஒரு பாதுகாப்பு உணர்வை ஏற்படுத்துவதாகவும் உள்ளது. குடும்ப உறுப்பினருக்கு ஒரு சிக்கல் என்றவுடன் அதனை சமாலிக்க ஒன்றுபட்டு செயல்படும் ஒரு நிறுவனமாகவும் உள்ளது. ஒருவருக்கொருவருவர் விட்டுக்கொடுத்து செல்வதால் சகிப்புத்தன்மையும் மேலோங்கிய இடமாகக் கருதப்படுகின்றது.

**அத்தை கொடுமை**

தன்னுடைய அம்மா உயிரோடு இருககும் வரை அவளை துன்புறுத்தி வந்த அத்தை தற்போது தன்னையும் துன்புறுத்தி வருதை நினைதது,

> **அம்மா உயிரோடு இருந்த வரையில் அவளைக் கொடுமையாக நடத்தினாள். தன் வீட்டுக் காவலுக்குக் கொண்டுவந்து வளர்த்த நாயையாவது ஒவ்வொரு வேளையில் தட்டிக்**

**கொடுத்துப் பாராட்டியிருப்பாள். ஆனால் நாயைவிடத் தாழ்வாக அம்மாவை நடத்தினாள். (கள்ளோ? காவியமோ?, ப.17)**

என்று தன் உள்ளத்துக்குள் குமுறிக் கொண்டிருக்கிறாள் மங்கை. இது பொதுவாகவே எல்லா வீடுகளிலும் காணப்படுவதுதான். கணவன் சரியில்லை என்றாள். அந்த மனைவியை வீட்டில் உள்ள அனைவரும் செல்லா காசாகத்தானே பார்க்கிறார்கள். கணவனோ குடிகாரன் அவளுக்கோ கல்வியில்லை. நாத்தனாரை அன்டி பிழைக்க வேண்டிய சூழல். அப்படியிருக்க அவள் பேசுவதையெல்லாம் அவள் சகித்துக்கொண்டுதானே ஆகவேண்டும். அவள் தன் மகளை வளர்தெடுக்க. மங்கை தன் அம்மாவை அத்தை நடத்திய விதத்தை எண்ணி வருந்தினாள்.

**ஏற்றத்தாழ்வு**

சமூகமானது ஏற்றத்தாழ்வுகள் நிரம்பியது. சாதிய, சமய, இன, மொழி, பொருளாதாரம், அரசியல் என அனைத்திலும் பாகுபாட்டை ஏற்படுத்தி மக்களை அதன் அளவுகோலில் பயணிக்கச் செய்கிறது. இங்கு வீட்டு வேலைகாரியாக வந்திருக்கும் மங்கையை தான் என்படி மணப்பது என்ற உணர்வை அந்த அளவுகோல்தான் அருளப்பனிடம் ஏற்படுத்தியது. இதனை,

**வீட்டில் வேலை செய்து வயிறு வளர்க்க வந்த ஒருத்தியை நான் எப்படி எனக்கு உரிய மனைவியாக எண்ணிவிட முடியும்? என்றேன். அப்படியா? சமுதாயத்தில் உள்ள ஏற்றத்தாழ்வுகள் உன் மனத்தையும்தாக்குகின்றனவா? என்றான். ஏற்றத் தாழ்வுகள் உள்ளவரையில் அவற்றை மறந்து விட முடியுமா? (கள்ளோ? காவியமோ?, ப. 52)**

என்ற உரையாடலில் இருந்து இதனை அறிந்து கொள்ள முடிகின்றது. சமூகம் ஏற்றத்தாழ்வுகள் காதலையும் கதிகலங்கச் செய்கின்றது. அதனை உதறிவிட்டு மனிதன் வாழ அவனுடைய மனமும் அவனுக்கு தைரியத்தை கொடுப்பதில்லை என்பதை இதிலிருந்து அறியலாம்.

**பெண் தேடல்**

இந்தியா சுதந்திரமடைந்த காலக்கட்டத்தில் இயற்றப்பட்ட நாவல் இது. அக்காலத்தில் ஆண்கள் தனக்கு துணையாக எப்படியான பெண் வேண்டும் என்று எதிர்ப்பார்த்துள்ளார்கள் என்பதை அறிந்துக்கொள்ள இந்த வரிகள் உதவுகின்றன. அதாவது,

**நாட்டுப்புறக் குடும்பங்களை நாடினால் கள்ளம் கரவற்ற நல்ல பெண்கள் கிடைக்கலாம். ஆனால் காலத்திற்கு ஏற்றவாறு வாழ்க்கையை அமைத்துக்கொண்டு வாழும் வல்லமை அவர்களுக்கு இருக்காது. கல்வியே இருக்காது. கல்வி இருந்தாலும் போதிய அறிவு இருக்காது. அப்படிப்பட்ட பெண் ஒருத்தியை வாழ்க்கைத் துணைவியாகக் கொள்வது எப்படி? நகரங்களில் செல்வம் உள்ள குடும்பங்களில்தான் கற்ற பெண்கள் கிடைப்பார்கள். ஆனால் அவர்களிடத்தில் பெண்மைப் பண்பு அமைத்திருப்பதோ அருமை நாகரிகத்தின் பெயரால் கண்மூடி வாழ்க்கையைக் கற்றிருப்பார்கள். நாம்தான் கண்ணாரக் காண்கிறோமே!. (கள்ளோ? காவியமோ?, பக்.55-56)**

என்று மு.வ. கூறியுள்ளார். இதில், நாட்டுப்புறப் பெண்கள் கபடமற்றவர்களாக இருந்தாலும் கல்வியறிவற்றவர்கள், நகர்ப்புறப் பெண்கள் கல்வியறிவு இருந்தாலும் நாகரிகம் என்ற பெயரால் கண்மூடி தனமாக வாழ்பவர்கள் என்பது கூறப்பட்டுள்ளது. அப்போது ஆண்கள் கல்வியறிவும்

கபடமற்றும் குடும்பத்தை நடத்தும் வல்லமை பெற்றும் விளங்கும் ஒரு பெண்தான் துணையாக வேண்டும் என்று எதிர்ப்பார்த்துள்ளதை அறியமுடிகின்றது.

**காதலா? காமமா?**

காமம் வேறு காதல் வேறு என்பதை, **காமம் தன்னலமானது. காதல் தன்னலம் அற்றது. (கள்ளோ? காவியமோ?, ப.69)** என்கிறார் மு.வரதராசன். தன்னை விரும்பாதவளை அடைய நினைப்பது காமம் என்பதை அருளப்பன்,

> **என்னை விரும்பாதவளை நான் நெருங்குவது எப்படி? விரும்பாதவளை நாடுவதும் பிறன் மனைவியை நாடுவது போல் குற்றம் அல்லவா என்று என் மனம் அடங்கியது. (கள்ளோ? காவியமோ?, பக்.61-62)**

என்று தன் மனதுக்கு போதிக்க முயல்கின்றான். மங்கை மீது காதல் தோன்றியதும் அவளிடம் நெருங்கி அவளிடம் தன் காதலை வெளிப்படுத்த நினைக்கும் அருளப்பனின் மனம் அவனைத் தடுத்து நிறுத்துகிறது. அவள் உன்மீது காதல் கொண்டாளா? உன்னிடம் கூறினாளா? என்றெல்லாம் அவன் மனதை அது சிதைத்துவிடுகின்றது. அதனால் அவன் மங்கையிடம் தன் காதலை சொல்ல தயங்கியவாறே பல நாட்களை கழிக்கின்றான்.

**முற்போக்கு சிந்தனைகள்**

தமிழரிடையே முற்போக்குச் சிந்தனைக்கு நேற்று இன்று தோன்றியவைகள் அல்ல. அது இரத்தத்தில் இரண்டறக் கலந்தவைகள். இதனை இந்நாவலில் அருளப்பனின் தந்தையின் கூற்றின் வழி அறியலாம்.

> **எனக்கு வேண்டியது அருளப்பனின் வாழ்வே தவிர உலகத்தின் அறியாமை அல்ல கண்மூடிச் சுற்றமும் அல்ல அவனுடைய முற்போக்குக்கு நான் தடையாக இருப்பேனோ? (கள்ளோ? காவியமோ?, ப.71)**

என்று தன் மகனின் மகிழ்ச்சியான வாழ்க்கைதான் தன்கு வேண்டுமே தவிர உறவும் உலகமும் அல்ல என்பதை ஆணித்தரமாகக் கூறியுள்ளார். மேலும், மங்கை பெங்களுருவில் இருந்து வந்த போது அவரே நேரில் சென்று அழைத்து,

> **நீ பழைய மங்கை அல்ல அம்மா! என் மகள் போல, என் மருமகள், அருளப்பனுக்கு வாழ்க்கைத் துணைவியாக வரவேண்டும். நீ மனம் வைத்து எங்களை வாழ்விக்க வேண்டும் என்று விட்டு விட்டுச் சொன்னார். (கள்ளோ? காவியமோ?, ப.94)**

என்பதில் வேலைக்காரியையும் தன் மருமகளாக ஏற்றுக்கொள்ளும் பொதுவுடைமைச் சிந்தனை வெளிப்படுகின்றது. அதுமட்டுமன்றி தன் மகள் போன்றவள் என்பதில் மகளுக்கு நிகரான சமஉரிமை வழங்கிய அவரின் சமத்துவ உரிமை புலப்படுகின்றது.

இவற்றிற்கு எல்லாம் ஒருபடி மேலாக, அருளப்பனின் ஆசிரியர் வேதங்கள் முழங்காமல் சாத்திரங்கள், சடங்குகள் எவையும் இல்லாமல் புதுமையான திருமணத்தை நடத்தி வைக்கிறார். இதனை,

> **அவர் உடனே புதிய திருக்குறள் நூல் இரண்டு எடுத்து என் கையில் ஒன்றும் மங்கையின் கையில் ஒன்றுமாகக் கொடுத்தார். அறன்வலியுறுத்தல், இல்வாழ்க்கை, வாழ்க்கைத் துணைநலம் என்ற மூன்று அதிகாரங்களை மெல்லப் படித்தார்; பிறகு என்னை ஏதேனும் ஒர் அதிகாரம் படிக்குமாறு சொன்னார். நான் அறிவுடைமை என்ற அதிகாரத்தில் பத்துக் குறளும்**

> **படித்தேன். நான் படித்து முடித்ததும், அவர் மங்கையைப் பார்த்து, அம்மா, நீ ஏதாவது ஓர் அதிகாரம் படி அம்மா! எங்கள் காது கேட்டு மகிழட்டும் என்றார். மங்கை வழக்கமான அமைதியோடு, அன்புடைமையில் பத்துக் குறளும் படித்தாள். இறுதியில் ஆசிரியரே தாயுமானவரின் கிளிக்கண்ணி பாடி முடித்தார். இந்தச் சடங்கு முடிந்தது. (கள்ளோ? காவியமோ?, பக்.98-99)**

என்றார். இதில் அந்த ஆசிரியரின் வாயிலாக மு.வ.வின் மனம் வெளிப்படுகின்றது. அவர் திருவள்ளுவர், தாயுமானவர் ஆகியோரின்மீது கொண்டிருந்த பற்று வெளிப்படுகின்றது. அதோடு புரட்சி வாழ்க்கையும் புலப்படுகின்றது.

**வாழ்க்கையில் உயர்வும் தாழ்வும்**

வாழ்க்கை என்பது இன்பத் துன்பங்களால் ஆனது. ஒவ்வொருவருக்கும் வாழ்க்கை மீதான புரிதல் என்பது தேவையானது. அந்த புரிதல் என்பது நம்மிடையே குறையும்போதுதான் சிக்கல்கள் ஆரம்பமாகின்றன. இவை தவிர்க்க இயலாதவைகளாய் இன்றளவும் மனித சமுதாயத்தில் வலம்வந்துக் கொண்டிருக்கின்றன. அதிலும் பெண்கள் நிலை ஒருபடி மேலாகச் சென்றுவிடுகின்றது. இதனை,

> **என்ன வாழ்க்கை! என்ன குடும்பம் எல்லாம் வறுமைப் பேய்க்கு அடிமை! அறியாமைப் பேய் அரசு புரிகின்றது. துன்பப் பேய் நட்புக் கொண்டாடுகின்றது. ஒரு பெண் என்ன செய்ய முடியும்! அவளும் அந்தப் பேய்களுக்கு இரையாக வேண்டியதுதான்! இவ்வாறு எண்ணிக் கண்ணைத் துடைத்தேன். (கள்ளோ? காவியமோ?, ப.77)**

என்று மங்கை தன் சொந்த ஊரான சுவர்பேட்டையைக் காணும்போது தன் அத்தையை நினைத்து கண்கலங்கி மனதுக்குள் பேசுகிறாள். தன் வறுமையாலேயே தன் அத்தை தன்னை கொடுமைப்படுத்தினாள். தானும் தந்தையை விட்டு பிரிய நேர்ந்தது என வருந்தினாள்.

இது இப்படியிருக்க எல்லோரும் ஏன் உயர்நிலை எய்துவதில்லை? சிலர் ஏன் களவுக்கு இறையாகின்றார்கள்? இந்த சமூகத்தில் ஏன் இவ்வளவு ஏற்றத்தாழ்வுகள்? என்பதை மங்கையின் குரலாய் மு.வ.,

> **உலகத்தில் நல்லாழ்வுக்கு வாய்ப்புக் குறைவு. சிலரால் அவற்றைப் பெற முடிகின்றது; மற்றவர்கள் வயிற்றுப் போரில் இறங்குகின்றார்கள்; திணறுகின்றார்கள்; தீமை செய்யத் துணிகின்றார்கள்; செய்து பழகுகின்றார்கள். ஏழு வீடு கட்டி ஏழாயிரம் பேரைக் குடியிருக்கச் செய்தால் வீடற்றவர்கள் என்ன செய்வார்கள்? வாய்ப்பு அற்றவர்களைக் கீழ்மக்கள் என்றும், பாவிகள் என்றும், மூடர்கள் என்றும், முரடர்கள் என்றும், குடிகாரர்கள் என்றும் வாய்ப்புப் பெற்றவர்கள் இகழ்கின்றார்கள். இது கொடுமைதான். (கள்ளோ? காவியமோ?, ப.78)**

என்று கூறியுள்ளார்.

கிராமத்தில் கிடைக்கும் உணவுகள் கூட வறுமையால் அம்மக்களுக்கு கிட்டாமல் வல்லமை பொறுந்திய வளமான பணக்காரர்களுக்கே கிட்டுகின்றது. அவர்கள் உற்பத்தி செய்தாலும் தன் வறுமையைப் போக்க தங்களுக்கென்று வைத்துக்கொள்ளாமல் நகரங்களில் வசிப்போருக்கு கொடுத்து ஊட்டச்சத்து குறைபாட்டால் ஏழை கிராமவாசிகள் அவதியுகின்றனர் என்பதை, **வளமான பாலும் காய்கறிகளும் நாட்டுப்புறத்தில் இருந்தாலும் நகரங்களே அவைகளைப் பெற்றுப் பயன் அடைகின்றன.** (கள்ளோ? காவியமோ?, ப.79) என்பதன்வழி அறியமுடிகின்றது.

*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்*
© 2025, IRJTSR 

சொந்த ஊரைவிட்டு வேலைதேடி வீட்டு வேலை ஆட்களாக வரும் பெண்களின் நிலை எப்படியானது. அவர்களை அந்த குடும்ப உறுப்பினர்கள் எவ்வாறு நடத்துகிறார்கள். அந்த குடும்பத்தில் அவர்களுக்கான இடம் என்ன என்பதையெல்லாம் மங்கையின் மௌனமொழியாய்,

**உயர்ந்தவர்கள் எங்களைத் தேடுகின்றார்கள் வீட்டுக்கு வேலையாளாக இருந்து ஒதுங்கி வாழ்ந்து குடும்பத்தை வாழ்விப்பதற்காகத்தான் தேடுகின்றார்கள். ஆனால், குடும்பத்தில் முக்கியமான இடம் எங்களுக்கு இல்லை நாங்கள் பெரிய வீடுகளில்தான் இருக்கின்றோம். நாங்கள் இல்லையானால் பெரிய வீடுகள் இருக்கவும் முடியாது. அந்த வீடுகளுக்குப் பெருமையும் இருக்க முடியாது. ஆனால் எங்களால் வளர்ந்து வாழும் உயர்ந்தவர்கள் மிகமிகக் கவலையோடு எங்களைக் கத்தரிக்கின்றார்கள். அடிக்கடி கத்தரித்துக்கொண்டே இருக்கின்றார்கள். நாங்கள் உயர்ந்த குடும்பத்தில் நல்ல மதிப்புப் பெறாதபடி எங்களைத் தாழ்த்தி அடக்கிக் கொண்டே இருக்கிறார்கள். (கள்ளோ? காவியமோ?, ப.87)**

என்று மு.வ. கூறியுள்ளார்

**குடும்பச் சிதைவு**

பொதுவாக குடும்பங்கள் சிதைவது என்பது அக்குடும்ப உறுப்பினர்களிடையே விட்டு கொடுக்கும் மனப்பான்மை குறைவதாலேயே ஏற்படுகின்றது. குடும்ப அமைப்பு என்பது மனங்கள் பல ஒன்று சேர்ந்த ஒரு கட்டமைப்பு. ஒவ்வொரு மனமும் ஒவ்வொரு விதமானவைகள். அவற்றையெல்லாம் குறைகூறுவதோ நிறைகளைக் கொண்டாடுவதோ மற்றவர்களின் மனதை புன்படுத்தும் செயலாகவே போய் முடியும். எனவே அனைவரையும் அனுசரித்து போவதே குடும்பங்கள் நிலைத்திருப்பதற்கான அடிப்படையாகும். இதனை,

**பொதுவாக ஒன்றின் வளர்ச்சிக்கும் மாற்றத்திற்கும் அழிவிற்கும் அடிப்படையாக விளங்குவது அது கொண்டிருக்கின்ற முரண்பாடுதான். இதனை மையமாகக் கொண்டுதான் பிற காரணிகள் அமைகின்றன. குடும்பச் சிதைவிற்கான காரணிகள் இருநிலைப்பட்டவை. அவை முறையே அகக்காரணிகள் புறக் காரணிகள் எனப்படுகின்றன. அகக்காரணிகள் தனி மனிதனின் மனம் அறிவு செயல் சார்ந்தவையாக இருக்கின்றன. புறக்காரணிகள் அவனைத் தவிர்த்து அவன் சார்ந்திருக்கின்ற சமுதாயம் சமூகம் பண்பாடு பிற தொடர்புகள் இவற்றைச் சார்ந்தவையாக இருக்கின்றன. அவ்விருகாரணிகளும் கூட்டுக்குடும்பம், தனிக்குடும்பம் இரண்டிற்கும் ஒத்தும் சிலவற்றில் வேறுபட்டும் அமைகின்றன. (தமிழ்நாவல்களில் குடும்பச் சிதைவுகள், ப.37)**

இந்நாவலில் அருளப்பன் – மங்கை அவர்களின் குடும்ப சிதைவிற்கும், இருவரும்மான புரிதலின்மையே காரணமாக அமைந்துள்ளது. இதனை,

**கதவைத் திறந்துகொண்டு உள்ளே வந்தார். கண்ணை மூடிக்கொண்டே சாய்வு நாற்காலியில் இருந்தேன். மங்கை! எழுந்திரு என்றார்? எடுத்து வைத்து இருக்கிறேன். போட்டுக்கொண்டு சாப்பிடுங்கள் என்றேன். இவ்வளவுதான். (கள்ளோ? காவியமோ?, ப. 119)**

கணவன் வந்தவுடன் அவனுக்குரிய பணிவிடைகளைத் தவறாமல் செய்து வந்த மங்கை ஒருநாள் உடல்சோர்வால் செய்ய முடியாமல் போனதே அக்குடும்ப பிரிவினைக்கு காரணமாகிவிட்டது. ஏனெனில்,

**குடும்பம் வெவ்வேறு மனநிலைகளை உடைய மனிதர்களைஉள்ளடக்கிய ஓர் அமைப்பு. வெவ்வேறு மனிநிலைகளை உடைய மனிதர்கள் இவர்கள் எப்போதும் ஒத்த தன்மை ஒத்த செயல்களை உடையவர்களாக இருக்கவியலாது. ஆயினும் ஒரு தேவை அல்லது கட்டாயத்திற்காகத் தற்தமது உணர்வுகளையும் மன வெழுச்சிகளையும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு இயங்குகின்றனர். இதில் ஒருவர் ஏதேனும் ஒரு சூழலில் முரண்பட்டு நிற்கும்போது அம்முரண்பாட்டுக்கு அவருக்கென்று தனித்த காரணங்கள் இருக்கின்றன. இவையே அகக்காரணிகள் எனப்படுகின்றன. ஆசை, பொறாமை, தன்முனைப்பு, மானம், சினம், ஏமாற்றப்பட்டோம் என்ற மனநிலை, தனி மனிதப்போக்கு, பாலுணர்வு என இவ்வகைக் காரணிகளைப் பட்டியலிடலாம். மேலும், இவற்றை உளவியல் சார்ந்தவை, பாலியல் சார்ந்தவை என்ற பெருவகைப்பாட்டுக்குள்ளும் அடக்கலாம். இவை ஒவ்வொன்றும் அதனதன் எழுச்சியின் வீச்சைப் பொறுத்துக் குடும்ப அமைப்புக்குள் பாதிப்பையும் சிதைவையும் ஏற்படுத்துகின்றன. (தமிழ்நாவல்களில் குடும்பச் சிதைவுகள், பக். 37-38)**

அவ்வாறுதான் மங்கையின் வாழ்விலும் எதிர்பாராதவிதமாக அவள் கணவனுக்கு இவளிடம் முரண்பாடு ஏற்பட்டுவிடுகின்றது. தன்னை தன் மனைவி அவமானம் செய்து விட்டதாக எண்ணுகிறான். ஆனால்,

**அது தவறுதான் வெளியூர் நண்பர் ஒருவர் அவரோடு வந்தது எனக்குத் தெரியாது. இவள் இப்படிச் சொன்னதை அந்த நண்பர் கேட்டார் அல்லவா? என்னுடைய குடும்பவாழ்க்கையைப் பற்றி அந்த நண்பர் என்ன நினைப்பார்? காதல், காதல் என்று எவளையோ மணந்து கொண்டான். ஆனால் வீட்டிற்குள் நுழைந்தபோது, களைப்பு அறிந்து சோறு போடவும் அன்பு இல்லை என்று எண்ணமாட்டாரா? இவன் மனைவிக்கு அடிமையாக வாழ்கின்றான் என்று எண்ண மாட்டாரா? நான் தனியாகப்போயிருந்து என்ன சொன்னாலும் எப்படி நடந்தாலும் கவலைப்பட்டிருக்கமாட்டேன் என்று முருகையாவிடம் சொல்லிமுறையிட்டாராம். (கள்ளோ? காவியமோ?, ப. 120)**

தன் நண்பனிடம் தனக்கு இருந்த மரியாதை இல்லாமல் போய்விடுமோ? என்ற அச்சமும் தன் வாழ்வு மற்றவர்களால் மதிக்கப்படாமல் போய்விடுமா? என மானவுணர்வும் மனைவிக்கு அடிமையாக வாழ்கிறான் எனச் சமூகம் தூற்றுமே என்ற குமுறலுமே அருளப்பனை அவன் மனைவி மங்கையிடமிருந்து பிரித்தது. அவனுடைய அப்பாவிடம் இருந்த தெளிவு அவனுக்கு இல்லை. தனக்கு சமூகத்தை உறவுகளைப் பற்றியெல்லாம் கவலையில்லை. தன் மகனின் வாழ்வுதான் முக்கியம் என்று முடிவெடுத்து மங்கையை அருணப்பனுக்கு மணம் முடித்த பெரியவரின் தெளிவு அவனுக்கு இருந்திருந்தால் அவன் கோபித்திருக்கமாட்டான். இத்தனைநாள் தவறாது பணிவிடையாற்றியவள் இன்று ஏன் இவ்வாறு நடந்து கொள்கிறாள் என்று சிந்தித்திருந்தாலும் இவ்வாறு நடந்துக் கொண்டிருக்க மாட்டான்.

மங்கை அவ்வாறு நடந்துக்கொள்ள காரணமும் உண்டு. அதாவது, **அந்த வயிற்று நோயையும் மாதவிடாய்த் துன்பத்தையும் எள்ளளவும் பெரிது படுத்தி இருக்கமாட்டேனே! உடனே எழுந்து குடும்பமானத்தைக் காத்திருப்பேன்!.** (கள்ளோ? காவியமோ?, ப. 122) என்கிறாள். இதனால் நான் செய்வது சரி என்று அவள் வாதாடவில்லை. மாறாக நண்பர் ஒருவர் உடன் வந்ததை அறிந்திருந்தால் வலியையும் பொருட்படுத்தாமல் பணிவிடை செய்திருப்பேன் என்றே உரைக்கிறாள். இதிலிருந்து மங்கையின் உயர்ந்த மனதை நாம் உணர வேண்டியுள்ளது.

*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்*
© 2025, IRJTSR 

**மனதின் ஏக்கம்**

தன் கணவனுக்கும் தனக்கும் இடையே ஏற்பட்ட கருத்து வேறுபாட்டால் மனமுடைந்து வீட்டில் இருந்த மங்கையின் கண்களுக்கு,

> **எதிர் வீட்டில் கொய்யா மரத்தின் சிறு கிளையில் இரண்டு காக்கைகள் உறங்குவது கண்டேன். அது ஒரு சிறு குடும்பம். ஆண் காக்கைக்கு ஓர் இடத்தில் தொழிலும், பெண் காக்கைக்கு ஒரு வீட்டில் வேலையும் இல்லை. இரண்டும் ஒன்றாகவே பறந்து திரிகின்றன. ஒன்று சேர்ந்து உணவு தேடி உண்கின்றன. ஒருங்கே அந்தச் சிறுகிளையில் சேர்ந்து உறங்குன்றன ஒன்று முன்னே உண்பதும் இல்லை; மற்றொன்று பின்னே விருந்தோடு வருவதும் இல்லை; வந்து கேட்பதும் இல்லை எடுத்து வைத்திருக்கிறேன். போட்டுக்கொண்டு சாப்பிடுங்கள் என்று சொல்ல வாயும் இல்லை. (கள்ளோ? காவியமோ?, ப. 125)**

எனும் காட்சியின்வழி தன் வாழ்வில் நடந்து கொண்டிருப்பதை அப்பறவைகளோடு ஒப்பிட்டுப் பார்க்கிறாள். மனிதர்களாய் பிறந்து வாழ்வில் பல தொல்லைகளுடன் உழல்வதைக் காட்டிலும் அந்த பறவைகளைப் போல இருந்திருக்கிலாமே என்றும் ஏக்கம் கொள்கிறாள்.

மக்களின் அனைத்துப் பிரச்சனைகளுக்கும் அவர்களின் வாய்தான் காரணம். எனவே நாவடக்கமே நல்வாழ்க்கைக்கு முதல்வழி என்பதை விளக்கும் விதமாக, **பறவைகள் அன்பாக வாழ்கின்றன; அவைகளுக்கு வாய் இல்லை; பேச்சு இல்லை; பிணக்கும் இல்லை. மக்கள் வாழ்க்கையில் வாய்தான் வம்பும் துன்பும் செய்கின்றது; பேச்சு வளர்கின்றது. பிணக்கும் முற்றுகின்றது. அன்பான வாழ்க்கையிலும் திடீரென அன்பு முறிகின்றது. (கள்ளோ? காவியமோ?, ப. 130)** என்று மங்கை கூறியுள்ளார்.

**குடும்பச் சிதைவுக்குக் காரணம்**

குடும்பச் சிக்கல்களை வெளியாரிடம் பேசுவதால் சிறு முளையாக அரும்பும் சிக்கல் பெரிய ஆலமரமாக வளர்ந்துவிடுமே தவிர அது ஒருபோதும் முடிவை நோக்கிச் செல்வதில்லை. என்றும் நம் சிக்கல்களை நாமே பேசித் தீர்த்துக்கொள்வதே சிறந்தவழி. இதனை, **வெளியார் தலையிடுவதால்தான் குடும்ப வாழ்க்கை கெடுகின்றது. ................ கணவன் மனைவி என்று வாழும் வாழ்க்கையில் ஆசிரியரும் வெளியார்தான். பெற்ற தாய் தந்தையரும் வெளியார்தான். பிறந்த குழந்தைகளுகளும் வளர்ந்து தேறிய பின் வெளியார்தான். (கள்ளோ? காவியமோ?, ப. 151)** என்று அருளப்பனின் தந்தை கூறுவதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

**தாய் – மகள் உறவு**

தாய் என்பவள் எவற்கும் நிகரற்றவள். தெய்வத்திற்கும் மேலானவள். அவளுக்கு அவளே இணையானவள். அந்த இடத்தை யாராலும் எப்போதும் பூர்த்தி செய்ய இயலவே இயலாது. இதனை, மங்கை அருளப்பனைவிட்டு பிறிந்த பிறகு அவனின் தாய் மற்றொரு திருமணம் தன் மகனுக்கு செய்ய துணிந்தபோது அருளப்பனின் மனம், **அவளுக்கு மாற்றாந் தாயாகி - மாறா நோயாகி - வருத்துவாள் என்ற உண்மை அந்தத் தாய் மனத்துக்குத் தெரியவில்லை. (கள்ளோ? காவியமோ?,** ப. 152) என்று வருந்தியது.

வறுமையிலும் வளமையிலும் தாய் தன் மக்களை ஒருபொதும் சுமையாக நினைப்பதில்லை என்பதை, **ஒரு தாய் குழந்தைக்கு வேண்டியதெல்லாம் வாங்கித் தந்து வளர்க்கிறாள்; மற்றொரு தாய் குழந்தைக்கு வயிறாரக் கூழ் வார்க்கவும் வழி இல்லை.** (கள்ளோ? காவியமோ?, ப. 164) என்பதன் வழி அறிய முடிகின்றது.

**கணவன் – மனைவி உறவு**

கணவன் மனைவி உறவு என்பது குடும்பத்தின் அடிப்படை. புரிதலால் பூத்து குலுங்க வேண்டியது. அன்பின் அடையாளமாய், பாசத்தின் பரிணாமாய், நேசத்தின் நேசமாய், உறவின் ஊற்றாய் இருந்து இந்த உலகின் அடுத்த தலைமுறையை அடையாளம் காட்டுவது. இதற்கு ஆண் பெண் பேதம் தேவையில்லை. அவர்கள் இணையர். அவர்களுக்குள் மனம் இணையாதபோதுதான் தனியர் ஆகின்றனர். பொதுவாகவே ஆண்களைக் காட்டிலும் பெண்கள் குடும்ப பொறுப்புகளை நிர்வகிப்பதில் சிறந்தவர்களாக இருப்பர். இதனை,

> **பெண்களுக்கு இயற்கையில் புத்திக் கூர்மையும் மனோபலமும் அபரிமிதமாக அமைந்திருக்கின்றன. பெண்ணின் சக்தியை அடக்கி நசுக்க முயன்றால் சமூகத்துக்கு அது பயன்படாமல் போகும். அந்த சக்தியை வளரவிட்டுத் தக்க சந்தர்ப்பங்களும் அளித்தால் அதனால் மனித சமூகம் ஏற்றமும் கொண்டு சிறப்படையும். (பெண் விடுதலையும் பெண்ணுரிமையும், ப.72)**

என்று பிரேமா கூறியுள்ளார். அவ்வாறுதான் பம்பாய் சென்ற மங்கை தன் புத்தி கூர்மையால் வளர்ந்து ஆளாகி ஒரு ஓட்டலின் உரிமையாளராகவும் மாறினாள். அவள் தன் கணவனுடனே அவனுக்கு பணிவிடைகள் மட்டும் செய்து கொண்டிருந்திருந்தால் அவளின் சிறப்பு அவளுக்கு தெரியாமலேயே போயிருக்கும்.

தன் கணவன் பம்பாய் வந்திருப்பதை அறிந்து அவருக்கு கடிதம் எழுதிய மங்கை, **ஐந்து ஆண்டுகள் ஆகிவிட்டன. எப்படியோ வாழ்ந்து வந்தேன். உங்கள் மங்கையாகவே வாழ்ந்து வருகின்றேன். உங்கள் மங்கையாகவே சாகவும் விரும்புகிறேன். அறியாமல் செய்த குற்றத்தை மன்னித்து விடுங்கள். எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றேன். (கள்ளோ? காவியமோ?, ப. 223)** என்று எழுதுகிறாள். இதில் அவளிடம் செல்வச் செழிப்போ, தன்னுடைய செல்வாக்கையோ குறிப்பிடவில்லை. மாறாக உங்கள் மங்கை என்பதும் மன்னித்து விடுங்கள் என்பதும் அவளின் கணவன்மீது அவள் கொண்டிருந்த மாறாத அன்பை நமக்குப் புலப்படுத்துகின்றது.

அவளின் உணவகத்தில் அவளைக் காணவே மக்கள் கூட்டம் அலைமோதியதைக் கண்டபிறகும். அவளின் செயல் பெரிய குற்றமாக அருளப்பனுக்கு தோன்றவில்லை. ஆனால், வீட்டில் இருந்தபோது எழுந்து வந்து உணவு கொடுக்கவில்லை என்பது அவனுக்கு பெரிய குற்றமாகத் தோன்றியது. இதனை, **அன்று வீடு அறிந்த குற்றத்தைப் பெரிதாக்கி வாழ்வைக் கெடுத்துக் கொண்டேன். ஆனால் நாடு அறிந்த குற்றத்தைப் பொருட்படுத்தாமல் வாழ்வைத் திருத்திக் கொண்டேன். நண்பனும் உலகமும் வேறுதான்; நானும் அவளும் வேறுதான். எங்கள் உறவிலும் உள்ளன்பிலும் தலையிட வேறு எவருக்கும் உரிமை இல்லை. இதை உணர இவ்வளவு காலம் ஆயிற்று. (கள்ளோ? காவியமோ?, ப. 226)** எனும் அருளப்பனின் உரையிலிருந்து அறியலாம்.

**பெண் மோகம்**

இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிர்காலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்
© 2025, IRJTSR

ஆண் – பெண் மோகம் என்பது இயற்கையானது. அதுவே காதலுக்கு அடிப்படையானது. உயிர்களின் தோற்றத்திற்கு காரணமானது. ஆனால், அதை எவ்வாறு எவரிடம் வெளிப்படுத்துகிறோம் என்பதில்தான் ஒழுக்கம் நிறைந்திருக்கின்றது. சமூக அக்கறையும் சமூகம் மீதான தனி மனித சிந்தனையும் கலந்திருக்கின்றது. இதனை,

> **உலகம் பெண்ணை ஒரு கள்ளாக நினைக்கின்றது. அந்தக் கள்ளைப் பார்த்து மயங்குகின்றது. பார்த்து மயங்குவதற்கே காசை வாரி இறைக்கின்றது. மேல்நாடு அப்படியே நாகரிகத்தை வளர்த்துவிட்டது. கீழ்நாடும் அப்படியே வளர்ந்து வருகின்றது. கள்ளைக் குடிக்கின்றவர்கள் மட்டும் மயங்குவார்கள். ஆனால் இந்தப் பெண்களைப் பார்க்கின்றவர்களும் மயங்குகின்றார்கள்; நினைக்கின்றவர்களும் மயங்குகின்றார்கள். (கள்ளோ? காவியமோ?, ப. 235)**

உலகம் பெண் மோகத்திற்கு அடிமையாகி காசை வாரி இறைக்கிறது. இது மேலை நாட்டு மோகத்தால் உண்டானது என்பதையும் அறியமுடிகின்றது. இது புதிதல்ல அரசர்கள் காலத்திலேயே பெண்களால் நாடுகள் இழந்ததையும் நாம் கற்றிருக்கிறோம்.

**உலக இயல்பு**

வீட்டில் உள்ள கவலைகளுக்கே மனமுடைந்து வீட்டுக்குள்ளே முடங்கிகிடந்தால் நாம் வெற்றி பெற இயலாது. வெளியில் வந்து உலக நிகழ்வுகளை அறிய வேண்டும். உலக சிக்கல்களையும் அதைத் தீர்க்கும் தலைவர்களையும் பற்றி சிந்திக்க வேண்டும். அப்போது நம் கவலைகள் எல்லாம் ஒன்றுமில்லை என்பதை நாம் உணரலாம். இதனை, **சிறு கவலையை மலையாக்கி வளர்க்கும் குடும்பத்தை ஒருபக்கம் வைத்து பெருங்கவலையையும் அணுவாக்கித் தேய்க்கும் உலகத்தை மற்றொரு பக்கம் வைத்து மனம் சீர் தூக்கிக் கொண்டிருந்தது. (கள்ளோ? காவியமோ?,** ப. 244) என்று மு.வ. கூறியுள்ளார்.

**முடிவுரை**

குடும்பத்தின் தலைவன் சரியில்லை என்றால் வருவார் போவார் கூட அக்குடும்பத்தை ஆள தொடங்கிவிடுவர் என்பதற்கு மங்கையின் அத்தை அவளையும் அவளின் தாயையும் கொடுமைபடுத்தியதைக் கொண்டு அறிய முடிகின்றது. இச்சமூகம் என்றும் ஏற்றத்தாழ்வுகளை விட்டுவிலகுவதில்லை என்பதற்கு மங்கையை தான் என்படி மணப்பது அவள் வீட்டு வேலைகாரி என்ற உணர்வு அருளப்பனிடம் இருந்ததன் வழி அறியலாம். மேலும், தனக்கு எப்படியாபட்ட துணை வேண்டும் என்று அருளப்பன் சிந்திக்கும் இடத்தில் கல்வியும் குடும்பத்தை நிர்வகிக்கும் ஆற்றலும் ஒருசேர பெற்றவளாக இருக்க வேண்டும் என நினைக்கிறான். தன்னை விரும்பாதவரை நினைப்பது காமம். தன்னை விரும்பியவரை அடைவது காதல். தன் மகனின் மகிழ்ச்சியான வாழ்க்கைதான் தன்கு வேண்டுமே தவிர உறவும் உலகமும் அல்ல Vன்று கூறும் அருளப்பனின் தந்தை முற்போக்கு சிந்தனையின் ஆணிவேராகப் பார்க்கப்படுகிறார். மேலும் திருக்குறள் படித்து மணமக்களுக்கு திருமணம் செய்து வைத்த ஆசிரியர் திராவிட சித்தாந்தத்தை எடுத்துரைக்கிறார். வாழ்க்கையில் உயர்வு தாழ்வு நிலையானதல்ல என்பதை மங்கையினுடைய வாழ்க்கை நமக்கு எடுத்துரைக்கின்றது. பெரும்பாலும் குடும்பச் சிதைவுக்குக் காரணம் புரிதலின்மையும் மாற்றார் தலையீடுமாகும். பிரிவு உண்டான பிறகு வருந்தி பயனடைய இயலாது என்பதை மங்கை, அருளப்பன் வாழ்க்கை எடுத்துரைக்கின்றது. மங்கையைப் பிரிந்த அருளப்பனிடம் மற்றொரு திருமணம் செய்து கொள்ள சொல்லும் போது தன் மகளை மாற்றாந்தாயாக வருபவள் எவ்வாறு கொடுமைபடுத்துவாள் தாயின் பாசம் தன் மகளுக்கு



© 2025, IRJTSR 

கிடைக்காதே என்று நினைப்பதிலிருந்து தாயின் தேவையினையும் அவளின் உயர்வையும் நாம் அறியலாம். ஆண்களுக்கு இருக்கும் பெண்கள் மீதான மோகமே அவர்களை அழிவுக்கு இட்டுச் செல்கிறது. எந்த கவலைக்கும் மருந்துண்டு. நம் கவலைகளை விட பெரிய கவலைகளை உடைய நபர்களை நாம் சந்திக்கும்போது நாமே பரவாயில்லை என்று எண்ணத் தோன்றுகின்றது. இவற்றின் அடிப்படையில் குடும்பம் என்பது மகிழ்வும், சோகமும், பாசமும், பிரிவும், தவிப்பும், ஏக்கமும், காதலும் நிறைந்தது. அதனை நாம் எவ்வாறு பார்க்கிறோமோ அவ்வாறே காட்சியளிக்கும் என்பதை கள்ளோ? காவியமோ? எனும் நாவல் எடுத்துரைக்கின்றது.

**துணைநூற்பட்டியல்**


[1] குணசேகரன், அ. *தமிழ்நாவல்களில் குடும்பச் சிதைவுகள்*. நியூசெஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2006.

[2] சியாமளா, ஜெ. *திலகவதி நாவல்கள் குடும்பச் சிக்கல்களும் சிதைவுகளும்*. காவ்யா, சென்னை, 2003.

[3] பாஸ்கல் கிஸ்பர்ட் (மொ.பெ.ஆ. ஜெ. நாராயணன்). *சமுகவியல் அடிப்படை கோட்பாடுகள்*. தமிழ் வெளியீட்டுக் கழகம், சென்னை, 1991.

[4] பிரேமா, இரா. *பெண் விடுதலையும் பெண்ணுரிமையும்*. அறிவுப் பதிப்பகம், சென்னை, 2008.

[5] மைதிலி சிவராமன். *பெண்ணுரிமை சில பார்வைகள்*. தமிழ்ப் புத்தகாலயம், சென்னை, 1995.

[6] வரதராசன், மு. *கள்ளோ? காவியமோ?*. பாரி நிலையம், சென்னை, 1995.


*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்*

© 2025, IRJTSR 